சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:60/2022 Date: 29.10.2025

பிரதிவாதி தரப்பு சாட்சி–1(D.W.1) ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.சம்சுல் ஆரிப், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ராமர் | சாதி | : | |
| த/பெ | : குருசாமி | சமயம் | : | |
| கிராமம் | : பாறைப்பட்டி | தொழில் | : | |
| தாலுகா | : சிவகாசி | வயது | : | 37 |

<u>முதல் விசாரணை–</u>

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கு விபரங்கள் தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 01.09.2020ம் தேதி 1, 2 பிரதிவாதிகள் பெயரில் இருக்கும் 10(1)பட்டா கணினி நகல் **பி.வா.சா.ஆ.2**. 1ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் அ பதிவேடு கணினி நகல் **பி.வா.சா.ஆ.3.** 07.09.2020ம் தேதிய 3ம்பிரதிவாதியான எனக்கு 2ம் பிரதிவாதி லட்சுமி என்பவர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.4**. எனது பெயரில் இருக்கும் அ பதிவேடு கணினி நகல் **பி.வா.சா.ஆ.5.** 30.11.2021ம் தேதிய எனது பெயரில் உள்ள விவசாய கடன் தள்ளுபடி செய்ததற்கான ஆவணம் கணினி நகல் **பி.வா.சா.ஆ.6**. 30.08.2023, 20.06.2025ம் தேதிகளில் எனது பெயரில் உள்ள கிஸ்தீ ரசீதுகள் அசல் **பி.வா.சா.ஆ.7.** 25.10.2025ம் தேதிய எனது பெயரில் உள்ள பட்டா 3610 கணினி நகல் **பி.வா.சா.ஆ.8** ஆகும். (பி.வா.சா.ஆ. 2, 3, 5 முதல் 8 வரையிலான

ஆவணங்கள் கணினி நகல் என வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.